# தமிழ் இலக்கியத்தில் நாட்டுப்புற கலைக்கூறுகள்

*முனைவர் மோ.சு. ஸ்ரீஜெயந்தி*
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை
திருவள்ளுவர் கல்லூரி, பாபநாசம்

மலர்: 10

சிறப்பிதழ்: 1

மாதம்: ஜூலை

வருடம்: 2022

P-ISSN: 2321-788X

E-ISSN: 2582-0397

DOI:
https://doi.org/10.34293/sijash.v10iS1-Jul.5013

## முன்னுரை

ஒரு நாட்டின் கலை மற்றும் கலாச்சாரம் அச்சமூகத்தினைப் பிரதிபலிக்கும் சிறந்த கருவியாகும். கலை என்பது பொழுது போக்கிற்காக மட்டுமின்றித் தகவல் ஊடகமாகவும், கலாச்சாரப் பலகனியாகவும் திகழ்கின்றது. கலை என்பது மன உணர்வுகளின் வெளிப்பாடு குறிப்பாக நாட்டுப்புறக் கலைகள் நமது மண்ணோடு, நம்மோடு தொடர்புடையவை. நமது பாரம்பரியத்தையும் அடி ஆழத்து வேர்களையும் பிரதிபலிப்பவை. கலை, சமூக வளர்ச்சிக்கும், மன எழுச்சிக்கும் சிறந்த கருவி.

நமது முன்னோர்களின் நம்பிக்கைகள், எண்ணங்கள், சிந்தனைகள், பழக்க வழக்கங்கள் ஆகியவற்றை நாட்டுப்புறக் கலைகள் மூலம் அறிய முடிகிறது. இக்கலைகளே சமுதாயத்தின் ஆவணமாகத் திகழ்கின்றன. இக்கிராமியக் கலைகளே, தகவல் பரப்பும் ஊடகமாகவும் பழக்க வழக்கப் பண்பாட்டுப் பெட்டகமாகவும் திகழ்ந்துள்ளது.

இன்று தொழில் நுட்பத்தின் அசுர வளர்ச்சியான தகவல் தொடர்பிற்கும் பொழுது போக்கிற்கும் பல்வேறு ஊடகங்கள் உருவாகி வருகின்றன. இம்மாறுதல் இயற்கையானதே. இவற்றினை நாம் எளிதில் புறக்கணித்துவிட முடியாது. காலத்திற்கு ஏற்ற தாறுதல்கள் தேவைதான்.

அதே சமயம் நாம் நம்முடைய பாரம் பரியத்தன்மைகளையும், கலை மரபுகளையும் ஒதுக்கிட வேண்டியதில்லை. நம்முடைய பாரம்பரியத் தன்மைகளை இழந்துவிடாமல் பாதுகாத்துக் கொள்ள வேண்டும். இந்தக் கடமையும், பொறுப்பும் அவசியமும் நமக்கு இருக்கிறது. தொழில் நுட்பத்தின், வளர்ச்சி அடைந்த நாடுகளும், அதிநவீன நாகரிகத்தோடு தன்னை அடையாளப்படுத்திக் கொண்டுள்ள நாடுகளும்கூட, தங்களுடைய பாரம்பரியக் கலைகளைப் புறக்கணித்துவிடவில்லை தங்களுடைய எல்லா வளர்ச்சிக்கும் அதனையே ஆதராமாகக் கொண்டுள்ளன. இக்கட்டுரை தமிழ் இலக்கியத்தில் காணப்படும் நாட்டுப்புறக் கலைகளையும் அவை நடத்தப்படும் முறையையும் விவரிக்கும் விதமாகவும் அமைந்துள்ளது.

**பொதுவாக தமிழக நாட்டுப்புற கலைகள்:**

1.ஒயிலாட்டம், 2.புலியாட்டம், 3.கோலாட்டம், 4.கரகாட்டம், 5.காவடி ஆட்டம், 6.கும்மி, 7.வில்லுப்பாட்டு, 8.தெருக் கூத்து, 9.பாவைக் கூத்து (பொம்மலாட்டம்) 10.கனியான் ஆட்டம், 11.வர்மம், 12.சிலம்பாட்டம், 13.களரி, 14.தேவராட்டம், 15.சக்கையாட்டம், 16.பொய்க்கால் குதிரை ஆட்டம், 17.மயிலாட்டம், 18.உறியடி விளையாட்டு (கண்ணன் விளையாட்டு), 19.தப்பாட்டம், 20.உக்கடிப்பாட்டு, 21.இலாவணி, 22.கைச்சிலம்பாட்டம், 23.குறவன் குறத்தியாட்டம், 24.துடும்பாட்டம், 25.புலி ஆட்டம், 26.பொம்மைக் கலைகள், 27.மண்பாண்டக் கலை, 28.கோலக் கலை.

இதுபோன்ற ஒவ்வொரு பகுதியிலும் ஒவ்வொரு விதமான கலைகள் உள்ளன. இந்தக்கலைகள் வெளியே தெரியாமல் உள்ளன. மேலும் நாடகம், வீது நாடகம், இசை நாடகம், நாட்டிய நாடகம், பரதநாட்டியம், இசைச் சிற்பம் போன்ற பல கலை நிகழ்ச்சிகளும் நடைபெற்று வருகின்றன.

**கிராமியக் கலைகள்:**

**ஒயிலாட்டம்**

கிராமக் கோவில்களில் ஒயிலாட்டம் விழாக்காலங்களில் ஆடப்படுகிறது. இதிகாச புராண வரலாற்றுக் கதைகளே ஒயிலாட்டத்தில் பாடப்படும், கட்டபொம்மன், மதுரைவீரன், வள்ளி, திருமணம் கதைகள் இடம் பெறும். ஒயிலாட்டம் ஆடுபவர் வெள்ளை ஆடை அணிந்து இருப்பர். காலில் சலங்கையும் கட்டியிருப்பர். கையில் ஆளுக்கொரு கைக்குட்டையைப் பிடித்து இருப்பர். நுனியில் பிடிநத்து அதை அழகாக வீசியப்படியே பாடி ஆடுவர்.

**கோலாட்டம்**

கோலாட்டம் என்பது பெண்களுக்கென்றே உரிய ஆட்டமாகும். இரண்டு கோல்களைப் பயன்படுத்தி ஒன்றுடன் ஒன்று மோதி ஒலி எழுப்பி ஆடுகின்ற ஆட்டமே கோலாட்டம் ஆகும். சமுதாயத்தைப் பற்றியும், தலைவர்களைப் பற்றியும் கோலாட்டப் பாடல்கள் எழுதப்பட்டன. தமிழ்நாட்டில் மட்டுமின்றி இந்தியாவின் பிற பகுதிகளிலும் கோலாட்டம் ஆடப்படுகிறது.

**கரகாட்டம்**

மாரியம்மனுக்கு ஆடி மாதத்தில் கரகம் எடுப்பது தமிழ் நாடெங்கும் உள்ள வழக்கமாகும். மலர்களைக் கொண்டு அழகான ஒப்பனை செய்யப்பட்ட குடத்தைத் தலையில் வைத்துக்கொண்டு ஆடும் ஆட்டம் கரக ஆட்டமாகும். இறைவழி பாட்டுடன் தொடர்பு உடையது இந்த கலை கல்வகை வண்ண மலர்களால் போர்த்தப்பட்டு அழகாகச் செய்யப்பட்டிருக்கும். இந்த கரகாட்டத்தில் ஆண்கள், பெண்கள் ஒன்றாக ஆடுவது பலஅ டுக்குகள் கொண்ட கரகத்தைத் தாங்கி ஆடுவது கரகாட்டத்தின் தனிச்சிறப்பு.

**காவடி ஆட்டம்**

காவடியாட்டம் சமய உணர்விற்காகவும் பொழுதுபோக்கிற்காகவும் நிகழ்த்தப்படுகிறது. காவடி தண்டைக் கொண்டு ஆடுவதால் இவ்வாட்டம் காவடியாட்டம் எனப் பெயர் பெற்றது காவடி எடுத்து முருகக் கடவுளை வழிபடும் நிகழ்ச்சியாகக் காவடி ஆட்டம் நடைபெறுவது தமிழர்கள் மரபாகும். காவடியாட்டம் இறைத் தொடர்புடையது ஆதலால் பல கடுமையான நோன்புகளை மேற்கொண்டு காவடி எடுப்பர். கலைத் திறனும் ஆடல் நுட்பமும் இதில் மிகுதியாக இருக்கும்.

**கும்மி**

தமிழகமெங்கும் நிகழும் ஆட்டங்களில் கும்மியாட்டம் முக்கிய இடம் வகித்து வருகின்றது. கும்மிக்கென்று தனிமெட்டு உண்டு. ஒருவர் முதலில் பாட, அதனைத் தொடர்ந்து பெண்கள் குழுவாகச் சேர்ந்து பாடுவர்.

### வில்லுப்பாட்டு

தமிழகத்தில் உள்ள நாட்டுப்புறக் கலைகளில் மிகச் சிறந்தது வில்லுப்பாட்டு வில்லுப்பாட்டு பிறப்பிடம் குமரி மாவட்டம் வில்லுப்பாட்டில் குறைந்தது ஐந்து பேர் இருப்பர். வில்லுப்பாட்டில் கதைப் பாடல்களைப் பாடிக்காட்டுவார்கள். தலைவர் இருவர் கதையைப் பாட்டாகக் கூறிச் சொல்லுத்போது விளக்க வேண்டிய இடத்தில் விளக்கி, உரைநடையாக கூறுவர். தெய்வங்களின் வரலாறு. தெய்வ நிலை பெற்ற வீரர்களின் வரலாறு. அரசர்களின் வரலாறு இவற்றை மக்களுக்கு எடுத்துக் கூறவே வில்லுப்பாட்டு பயன்பட்டது. விழாக்களில் பாடப்பட வில்லுப்பாட்டு, இன்று இலக்கியம், அரசியலுக்கு பயன்படுத்தப்பட்டு வருகின்றது. அரசியல் சமுதாயத் தலைவர்களின் வரலாறுகள் வில்லுப்பாட்டில் இடம் பெறுகின்றன. காந்தி மகான் கதையை மறைந்த கலைவாணர் பாமர மக்களிடையே பரப்பினார்.

### தெருக்கூத்து

பிறநாட்டுப்புறக் கலைகளைப் போன்றே இதுவும் தெய்வ வழிப்பாட்டோடு தொடர்பு உடையது. திரௌபதி விழாக்களில், மாரியம்மன் விழாக்களில், சிவன், திருமால், கணேசன் ஆகியோருக்கு எடுக்கப்படும் விழாக்களில் தெரு கூத்தானது நிகழ்த்தப்பட்டு வருகிறது.

### பொம்மலாட்டம் (பாவைக்கூத்து)

பொம்மைகள் வைத்து நிகழ்த்துவதால் பாவைக் கூத்து எனப்படுகிறது. பொம்மைகள் தோல் பொம்மைகள், மண் பொம்மைகள் என இருவகைப்படும். தமிழ் நாட்டில் இக்கலை தஞ்சை, திருச்சி, இராமநாதபுரம், நெல்லை, குமரி ஆகிய மாவட்டங்களில் நடத்தப்படுகிறது. பாவைகளை மரத்தாலும், தோலாலும் செய்து நூல்களைக் கட்டி ஒரு திரைக்குப் பின்னாலிருந்து ஒருவர் ஆடியசைத்துக் கதைகளை விளங்கச் செய்யும் நாட்டுப்புறக் கலைக்கு “பாவைக் கூத்து” எனப்பெயர்.

### சிலம்பாட்டம்

சிலம்பம் தமிழர்களின் வீர விளையாட்டு ஆகும். தமிழகத்தில் பல்வேறு பகுதிகளில் சிலம்பம் சிறப்புற்று விளங்கினாலும் குமரி மாவட்டத்தின் சில பகுதிகளில் விளையாடும் சிலம்பாட்டமே சிறப்பானது. இதில் கம்பிகளைக் கொண்டு ஒலியெழுப்பி விளையாடுவர். இக்கலையைப் பயிற்றுவிக்கும் செயலைக் “களிரிப்பயிற்று” என்று கூறுவர். புதடத சமயத்துறவிகள் மூலம் இந்தப் போர்க்கலை சினா, ஜப்பான் நாடுகளுக்குச் சென்றது என்பர் வரலாற்று ஆசிரியர்கள். இக்கலை சிறந்த மாற்றங்களுடன் ஜப்பான் நாட்டில் கராத்தே என்று அழைக்கப்படுகிறது.

### நாட்டுப்புற நிகழ்த்துக் கலைகள்

சாட்டுப்புற நிகழ்த்து கலைகள் நிகழ்த்திக் காட்டும் (நடத்திக் காட்டப்படும்) வகையில் அமைந்தசை. அவை ஆடலாகவோ, பாடலாகவோ, ஆடலும் பாடலும் இணைந்ததாகவோ, ஆடமல் பாடல் உரையாடலுடன் கூடியதாகவோ நிகழ்த்திக் காட்டப்படும். இதில் ஒரு கலைஞரோ பல கலைஞர்களோ பங்கு பெற்று, ஒரு சம்பவத்தையோ, கதையையோ, கருத்தையோ ஆடல் பாடல் வழி, பார்வையாளர் முன் நிகழ்த்திக் காட்டுவர்.

### பொதுக் கூறுகள்

நாட்டுப் புறங்களில் நிகழ்த்திக் காட்டப்படும் நாட்டுப்புற நிகழ்த்து கலைகளைப் பொறுத்தவரை ஆட்டங்கள் பலவாகவும் ஆடப்படும் கூழல் களம் வேறு வேறாகவும் இருந்தாலும் கூட அவற்றுள் சில பொதுக் கூறுகளும் இருக்கத்தான் செயள்கின்றன. இவற்றைப் புரிந்து கொண்டால் மட்டுமே கலைகளையும் நம்மால் விளக்கிக் கொள்ள முடியும்.

### ஆடுகளம்

நாட்டுப்புற நிகழ்த்து கலைகளை நிகழ்த்துவதற்கென்று குறிப்பிட்ட இடமோ, களமோ, அரங்கமோ கிடையாது. எங்கு வேண்டுமானாலும் எந்த இடத்தில் வேண்டுமானாலும் (கோயில், ஊர்மந்தை, தெருக்கள்) நிகழ்த்திக் கொள்ளும் சுதந்திரப் போக்கைக் கொண்டவையாகும். சிறு தெய்வ வழிபாடுகளின் போது எங்கெல்லாம் சடங்கு நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றனவோ அங்கெல்லாம் கலைஞர்களும் சென்று ஆடுவார்கள். தெய்வங்களை அலகரித்து ஊர்வலம் வரும்போது, அதன் முன்னால் கலைஞர்கள் ஆடிச் செல்வதை நீங்களும் பார்த்திருக்கலாம். நாட்டுப்புற நிகழ்த்து கலைகளுக்கான ஆடுகளம் விரிந்த பரப்பைக் கொண்டது என்பதை இதன்வழி அறியலாம்.

### வட்டாரத் தன்மை

நாட்டுப்புற நிகழ்த்து கலைகளில் பெரும்பாலானவை வட்டாரத் தன்மை கொண்டவையாகும். வட்டாரத் தன்மை என்றால் குறிப்பிட்ட பகுதிகளில் மட்டுமே அந்தக் கலைகளைப் பார்க்க முடியும். ஒரு கலை தமிழகம் முழுவதும் செல்வாக்குப் பெற்றிருக்கின்றது என்றோ, நிகழ்த்தப்படுகிறது என்றோ கூறிவிட முடியாது. குறிப்பிட்ட கலைகள் குறிப்பிட்ட பகுதிகளில் மட்டுமே வழக்கில் இருக்கும். குறிப்பாகத் தெருக்கூத்து என்ற நிகழ்த்து கலையைத் தமிழகத்தின் வட பகுதிகளில் மட்டுமே காணமுடியும். அதேபோல "வில்லுப்பாட்டு, கணியான் கூத்து, கழியாட்டம்" போன்ற கலைகளைத் தமிழகத்தின் தென் பகுதிகளில் மட்டுமே காணமுடியும். வட்டாரத் தன்மையுடைய இக்கலைகள் அந்தந்தப் பகுதி மக்களால் நிகழ்த்தப் பட்டும், செல்வாக்குப் பெற்றும் விளங்கும்.

### நிகழ்த்தப்படும் முறை

நாட்டுப்புற நிகழ்த்து கலைகளில் கைகள், கால்கள், இடுப்பு போன்ற உடல் உறுப்புகளின் இயக்கங்களே மிகுதியாகக் காணப்படும். முக பாவங்களையோ, அபிநயங்களையோ காண இயலாது. இக்கலைகள் வட்ட வடிவ முறையிலோ நேர்கோட்டு முறையிலோ நிகழ்த்திக் காட்டப்படும். இதில் வட்ட வடிவ முறையே தொன்மையானதும் தொடக்கக் கால ஆட்ட முறையுமாகும். இம்முறையே நாட்டுப்புற நிகழ்த்து கலைகளில் மிகுதியாகக் காணப்படும். பார்வையாளர்களும் வட்டமாக நின்றோ அமர்ந்தோ கலைகளைக் கொண்டு மகிழ்வர்.

### பெயர் பெறும் முறை

நாட்டுப்புற நிகழ்த்து கலைகள், கலைகளில் பயன்படுத்தப் பெறும் கருவிகள், கலைகளில் ஈடுபடும் இனத்தார், கலை நிகழ்த்தப் பெறும் இடம் என்ற அடிப்படையில் பெயர் பெறுகின்றன. குறிப்பாகக் கலைகளில் பயன்படுத்தப் பெறும் கருவிகளின் அடிப்படையிலேயே (கரகாட்டம், காடியாட்டம், வில்லுப்பாட்டு, தப்பாட்டம், பாவைக்கூத்து) மிகுதியும் பெயர் பெறுகின்றன.

நாட்டுப்புற நிகழ்த்து கலைகளில் திட்டவட்டமான இலக்கண வரையறைகள் கிடையாது. எளிய பயிற்சிகளால் எளிதில் கற்றுக் கொள்ளக் கூடியவை' நெகழ்ச்சித் தன்மை உடையவை. இக்கூறுகளே நாட்டுப்புற நிகழ்த்து கலைகளை இன்னும் வாழ வைத்துக் கொண்டிருக்கின்றன. மாணவர்களே! நீங்களும் ஆடத் தயாரா?

### வகைப்பாடு

தொடக்கக் கால மனிதன் தான் கண்டவற்றைப் போலச்செய்தலாய் நிகழ்த்திக் காட்டி அதனை முறைப்படுத்திக் கலைவடிவம் ஆக்கினான். அக்கலைகளில் ஆடலும் பாடலும் சிறப்பிடம் பெற்றன. பின்னாளில் கதைக் கூறுகள் சேர்க்கப்பட்டு உரையாடல் இடம் பெற்றது. இந்நிலையில்

கலைகளின் தன்மைக்கேற்ப, அவை பெயர் சூட்டடப்பட்டு, நிலைத்த கலை வடிவங்களாய் உலா வந்தன. ஒவ்வொரு நிகழ்த்து கலையும் தனக்குள் பல்வேறு சிறப்புக் கூறுகளைக் கொண்டமைந்தது. இந்நாட்டுப்புற நிகழ்த்து கலைகளின் அமைப்பு முறையை விளக்கிக் கொள்ளும் வண்ணம், கலைகளின் தன்மை அடிப்படையில், வகைப்பாடு எடுத்துரைக்கப்படுகிறது.

## முடிவுரை

தமிழ் இலக்கியத்தில் காணப்படும் இவ்வகை கலைகள் தமிழ் மக்களின் நாட்டுப்புற கலைகளை வளர்க்கும் விதமாகவும் பறைசாற்றும் விதமாகவும் காணப்படுகிறது. ஏட்டில் எழுதாத கவிதையாக நாட்டுப்புறப் பாடல்கள் காணப்படுகின்றன. நாட்டுப்புறக் கலைகள் ஒவ்வொரு சமுதாயத்தின் பண்பாடுகளை விவரிக்கும் விதமாகவும் காணப்படுகிறது. நாட்டுப்புற கலைகளின் வகையும் அவை நடத்தப்படும் முறையும், ஒவ்வொரு வட்டாரங்களில் நடைபெறும் முறையும் இக்கட்டுரை மூலமாக விவரிக்கப்பட்டுள்ளது.